பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6 00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 07 புதன்கிழமை (20-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 115

# ஸ்ரீலங்காவுக்கு ஆயுதங்களை விற்காதீர்!

# இஸ்ரேலிடம் பிரசைகள் குழு கோரிக்கை

## பிரதமர் பெரஸுக்கு மகஜர்

சாவகச்சேரி, மார்ச் 20

**தமிழின அழிப்பில் ஈடுபடும் ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதையும், இராணுவ உதவிகளை வழங்குவதையும் நிறுத்துங்கள்: இது தொடர்பான தங்களின் முடிவை மீளாய்வு செய்யுங்கள்.**

**— இவ்வாறு யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் சார்பில் யாழ். பிரசைகள் குழு இஸ்ரேலிய அரசைக் கோரியிருக்கின்றது.**

இஸ்ரேலின் பிரதமர் ஷிமோன் பெரஸுக்கு யாழ். பிரசைகள் குழு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாஜி. ஜேர்மனி உட்பட பல்வேறு வல்லரசுகள் ஆற்றிய கொடுஞ்செயல்களினால்' இஸ்ரேலிய மக்கள் நெடுங்காலமாய் அனுபவித்து வந்த துன்பதுயரங்கள் குறித்து அம்மக்கள் மீது இலங்கைத் தமிழர்கள் அனுதாபம் கொண்டோராய் இருந்து வந்துள்ளார்கள்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 10 போராளிகள், ஓர் ஆதரவாளர் மன்னார் தாக்குதலில் வீரச்சாவு

சாவகச்சேரி, மார்ச் 20

கடந்த 15 ஆம் திகதி மன்னார் தீவுப்பகுதியில் ஸ்ரீலங்கா கடற் படையினருடனான நேரடி மோதலில் 10 போராளிகளும், ஒரு ஆதரவாளரும் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்தவர்களின் விவரம் வருமாறு:

★ மேஜர் கார்மேகம் (செபமாலை ஜேசுதாசன் — மன்னார்)

★ 2ஆம் லெப். காளிதாஸ் (ஞானப்பிரகாசம் சரவணபவன் — மன்னார்)

★ 2ஆம் லெப். ஜீவநாதன் (சத்தியோ குஜூட் செபமாலை — மன்னார்)

★ வீரவேங்கை மைந்தன் (சிலுவைராசா செளந்தரராசா — மன்னார்)

★ வீரவேங்கை வில்லவன் (தேவசகாயம் சதீஸ்குமார் — மன்னார்)

★ வீரவேங்கை செம்மல் (செபமாலை ரிச்சர்ட் வெலிங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதல்களை சமாளிக்க அம்பாறைக்கு மேலதிக அதிரடிப்படை

கொழும்பு மார்ச் 20

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் அங்குமேலதிக அதிரடிப் படையினரை அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்புப் பொறுப்பு அதிரடிப் பொலீஸார் வசமே உள்ளது.

எனினும் இம்மாவட்டத்தில் விடுதலைப் புலிகளை எதிர்கொள்வதற்கு ஆகக் குறைந்தது இரண்டாயிரம் அதிரடித் துருப்புகளாவது தேவையென அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குடுத்து இப்போது பாதுகாப்புச் சபை மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாகவும், அது சம்பந்தமான தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் வரை சாதாரண பொலீஸ் அணிகளை அங்கு அனுப்பி வைக்க ஏற்பாடாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் உன்னிச்சைக் காட்டுப்பகுதியில் பல முகாம்களை அமைத்துள்ளனர் என்றும்—

செங்கலடி முதல் மகாஓயா வரை முப்பது சதுரமைல்களுக்கு விரிந்துள்ள உன்னிச்சைப் பகுதியூடாக தொப்பிகல காட்டுப்பகுதிக்குள் ஊடுருவித் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## பெண் கரும்புலிகளுக்கு உதவ மற்றொரு குழு கொழும்புக்குள்!

கொழும்பு, மார்ச் 20

பிரபல அரசியல்வாதிகளைக் கொலை செய்வதற்கும், பொருளாதார கேந்திர நிலையங்களைத் தாக்குவதற்குமென கொழும்புக்கு அனுப்பப்பட்ட பெண் கரும்புலிகளுக்கு உதவுவதற்காக, இன்னொரு குழு கொழும்பிற்குள் ஊடுருவியுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்புக்கு வந்துள்ள தாக்குதல் பிரிவுக்குத் தேவையான மறைவிடங்களை இரகசியமாக ஒழுங்கு செய்வதில் இங்குள்ள தமிழ் வர்த்தகர்களே ஈடுபட்டிருப்பதாக பொலீஸார் நம்புகின்றனர்.

சந்தேகத்துக்குரிய வர்த்தகப் புள்ளிகளில் ஒருவரின் வீட்டைப் பொலீஸார் கடந்த வாரம் சோதனையிட்டதாகவும், ஆனால் அந்த வர்த்தகர் தகவலறிந்து முதல் நாளே வெளிநாடு போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் பிரிவிடம் பொறுப்பு அளிக்கப்பட்ட பணிகளின் நிலை என்ன? அதன் செயற்பாடு எவ்வாறு முன்னேறி வருகிறது? என்பன போன்ற தகவல்களை உடனுக்குடன் வடக்கே உள்ள விடுதலைப் புலிகள் தலைமைப்பீடத்திற்கு அறிவிப்பதற்கான இரகசிய தொலைத் தொடர்பு சாதனங்கள் கொழும்பில் உள்ள வீடு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இரகசியப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் இவ்வாறு கூறியதாக ''சண்டே லீடர்'' தகவல் வெளியிட்டுள்ளது.

(அ)

## மின்வெட்டு

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் நாடு முழுவதும் நான்கு மணி நேர மின்வெட்டு சுழற்சி முறையில் அமுல் செய்யப்படும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.

(இ-6)

## தகவலுக்கு ரூ. 2 லட்சம்

கொழும்பு மத்திய வங்கிக் கட்டடத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியதாகக் கருதப்படும் இருவரை பிடிப்பதற்கு உதவிய இருவருக்கு பொலீஸ்மா அதிபர் டபிள்யூ. பீ. ராஜகுரு நேற்று முன்தினம் தலா இரண்டரை இலட்சம் ரூபாவை சன்மானமாக வழங்கினார். (இ-ரி)

## 172 குடும்பங்கள் தேவாலயத்தில் தஞ்சம்

பூநகரி நாச்சிக்குடாவில் தாக்குதல் நடந்த பின்னர் அங்கு தங்கியிருந்த 172 குடும்பங்கள் தற்சமயம் கத்தோலிக்க தேவாலயத்தில் தங்கியுள்ளனர்.

இதற்கிடையில் நாச்சிக்குடாத் தாக்குதல் குறித்து தமக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

(இ-3)

## தீ விபத்தில் 150 பேர் பலி

மணிலா, மார்ச் 20

பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்று இடம்பெற்ற தீவிபத்தில் 150 பேர் மரணமானார்கள்; 120 பேர் எரிகாயங்களுக்குள்ளானார்கள்.

இறந்தவர்கள் இளைஞர்களும் யுவதிகளும் என அறிவிக்கப்படுகிறது. ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்றின் போதே மண்டபத்தில் தீப்பற்றிக் கொண்டது.

மண்டபத்துக்கு ஒரு வாசலே இருந்ததால் நெரிசலில் பலர் மீது தீப்பற்றிய தாகக் கூறப்பட்டது. (அ)

## இ. தொ. கா. அடையாள வேலை நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 20

தோட்டத் தொழிலாளர்களுக்கு வருடம் 300 நாள் வேலையும், எட்டு ரூபா சம்பள உயர்வும் கோரி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த கோரிக்கையை அரசாங்கம் கவனத்தில் எடுக்காததால் எதிர்வரும் ஏப்ரல் 22 முதல் 27 ஆம் திகதி வரை அடையாள வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக அறிவித்துள்ளது இலங்கை தொழிலாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டாஞ்சேனையில் குண்டுகள் கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 20

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் பழைய சோனகத் தெருவில் குப்பைகள் போடுமிடத்தில் மறைந்து வைக்கப்பட்டிருந்த 19½ இறாத்தல் எடை உள்ள மூன்று குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயல் இழக்க வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

வடிகால் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இந்த குண்டுகளைக் கண்டுபிடித்து பாதுகாப்புப் படையினருக்கு தகவல் கொடுத்தனராம்.

வாழைத்தோட்டப் பொலீஸார் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (இ-6-7)

## வலிகாமத்தில் படையினர் கண்ணிவெடி தேடுகின்றனர்

வலிகாமத்தில் மல்லாகம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலையடுத்து கண்ணிவெடிகள், மிதிவெடிகள் ஆகியவற்றை கண்டுபிடிக்கும் வேலைகள் மீண்டும் அங்கு ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் மீளக் குடியேறும் வகையில் கண்ணிவெடிகள் அகற்றப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## லக்ஷ்மன் கதிர்காமர் பதவி துறக்க வேண்டும்

### நாடாளுமன்றில் அநுரா கோரிக்கை

''புத்தளம் சிமெந்துத் தொழிற்சாலை ஊழல் விவகாரம தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உடன் பதவியை ராஜினாமாச் செய்யவேண்டும்''

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் கோரினார்.

புத்தளம் சிமெந்து தொழிற்சாலை விற்பனையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்குற்றசாட்டு தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இப்படி கோரிக்கை விடுத்தார்.

இன்றைய அரசு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

நேற்று விவாதம் நடந்த சமயம் ஜனாதிபதி சந்திரிகாவும் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாயிருந்தார்.

(இ-3-6)

## இந்திய பொதுத் தேர்தல் ஏப். 27 இல் ஆரம்பம்

புதுடில்லி, மார்ச் 20

இந்தியாவில் பொதுத் தேர்தல் நடக்கும் திகதிகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் 27, மே 2, மே 7 ஆம் திகதிகளில் வாக்களிப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-6)

## அரச அதிபரை சுட்டவர் இளைஞர் எனத் தகவல்

கொழும்பு, மார்ச் 20

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஏ. கே. பத்மநாதன் மயிரிழையில் உயிர் தப்பினார். கல்லடியில் அவரது வீட்டுக்கு வெளியே காத்திருந்த இளைஞர் ஒருவரே அவரை நோக்கிச் சுட்டார் என்று தெரிவிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிமெந்து ஊழியருக்கு சம்பளம் கிடைக்கும்

சாவகச்சேரி, மார்ச் 20

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான சம்பளம் சாவகச்சேரியில் வைத்து வழங்கப்படும் என யாழ்' அரச அதிபர் திரு எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

வீடமைப்பு, நிர்மாணத் துறை அமைச்சின் செயலாளருடன் யாழ். அரச அதிபர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Yanmar (30 H.P.) எஞ்சினும், அமுதா கிறைண்டர் இரண்டும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: குணா மில், அல்லையம்பதி, துன்னாலை. [40355]

வீட்டுப் பாவனைப் பொருள்கள், மரத் தளபாடம், அலுமாரி, குசன் செற்றி உட்பட தையல் மெசின் - சிங்கர், தொலைக்காட்சிப் பெட்டி நாஷனல், T. V. S. மோட்டார் சைக்கிள், Fan. திருமதி அ. வாமதேவா, மே/பா ச. கார்த்திகேசு, கோவிலாக் கண்டி, கைதடி. (41060)

### DISSERTATION

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறை விதிகளுக்கு அமைய பயின்ட் செய்து கொடுக்கப்படும், குமார் அச்சகம், சிவன் வீதி. பருத்தித்துறை. (40358)

### விற்பனைக்குண்டு

மரக்கடைச்சல் கட்டைகளும் பழைய தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. மேலதிக கடைச்சல் வேலைகளுக்கு தொடர்பு கொள்ளவும், தியாகு மரக்காலை, யா/02/3174, மந்திகை புலோலி தெற்கு, புலோலி. (40351)

### சாண விறாட்டி

கண கணப்புத்தரும் சாண விறாட்டி பாவிப்பதால் சமயலறையில் சிரமத்தை தவிர்த்து சமயலை இலகுவாக்குவதுடன் தூய்மையையும் பேணுகிறது. விறாட்டி ஒன்று ரூபா 1/- மட்டுமே. மில்க்வைற், மீசாலை. (சி-2994)

### தவறிவிட்டது

18-03-1996 அன்று முகமாலை பகுதியில் நடைபெற்ற மினி பஸ் விபத்தில் காயமடைந்த திரு. க. வைத்தீஸ்வரன் (சுகாதார கல்வி அதிகாரி) என்பவருடைய அடையாள அட்டையும், ஓய்வூதிய அட்டையும் அதே இடத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (41068)

### விற்பனையாகிறது

1996-97ஆம் ஆண்டுக்கான வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகிறது. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 08, நவீன சந்தை மேல்மாடி (உட்புறம்), சாவகச்சேரி. [சி-2993]

# ஒப்பந்த வேலை மேற்கொள்வோர் பதிவு

ஒப்பந்த அடிப்படையில் நிர்மாண வேலைகளை மேற்கொள்ள விரும்புவோர் ஏற்கனவே தமிழீழ நிர்வாக சேவையின் பொறியியல் பகுதியில் பதிவு செய்திருப்பின், தற்போது செயல்பட விரும்பும் மாவட்டத்திலுள்ள தமிழீழ நிர்வாக சேவையின் பொறியியல் பகுதியுடன் தொடர்பு கொண்டு பதிவினை புதுப்பிக்கவும். புதிய ஒப்பந்தகாரராக பதிய விரும்புவோர், செயல்பட விரும்பும் மாவட்டத்திலுள்ள தமிழீழ நிர்வாக சேவையின் பொறியியல் பகுதியுடன் தொடர்பு கொண்டு பதிவை மேற்கொள்ளவும்.

மேற்படி இரு பகுதியினரும் **31-03-96**க்கு முன்னர் மாவட்ட பொறியியல் பகுதியின் பதிவில் இருந்தால் மட்டுமே வேலை கோரல் கேள்விகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவராவர்.

பொறுப்பாளர்,
தமிழீழ நிர்வாக சேவை,
தமிழீழம்.

(சி-4122)

# ஈவினை புன்னாலைக்கட்டுவன் மீனாட்சியம்பாள் கோவில்

**திருவிழாக்காலம் 19-03-96 முதல் 02-04-96 வரை**

ஈவினை மீனட்சியம்பாள் அருள் வேண்டி மனதால் அவள் பாதம் அர்ச்சித்து 19 - 02 - 96 செவ்வாய் முதல் பங்குனி உத்தரம் வரை சாவகச்சேரி புராதன வாரியப்பர் சிவன் கோயில் அமிர்தபாஷிணி அம்பாள் சன்னிதியில் தினமும் 15 தினங்களும் மாலை 4-30 மணிக்கு விஷேட பூஜை வழிபாடு நடைபெறும் என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகிறேன்.

கு. ஜெயகதீஸ்வரக்குருக்கள்
புன்னாலைக்கட்டுவன்

பிரதமகுரு வாரிவனேஸ்வரம்,
சாவகச்சேரி. (41060)

# A/L 96, A/L 96 (மீட்டல்) A/L 97 SPOKEN ENGLISH

**வகுப்புக்கள் ஆரம்பம் 3-4-96**
(மாலை 3-00 மணி)

அனுமதிகளை 22 ஆம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளவும்

நிர்வாகி S. அருள்நங்கை

## யாழ். புதிய உயர் கல்லூரி

(அரசினர் வைத்திசாலை முன்பாக)
விநாசித்தம்பி லேன், சாவகச்சேரி.
(சி-2997)

# தேடுகிறார்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி, பண்டியன் தாழ்வு, சந்தனமாதா வீதியைச் சேர்ந்த சட்டத்தரணி

**இரத்தினசிங்கம்**

என்பவரை வேலணையைச் சேர்ந்த இ. சந்தியசீலன் தேடுகிறார். இருக்கும் இடத்தை அறியத்தரவும்.

இ. சத்தியசீலன்,
விநாயகர் களஞ்சியம்,
ஆனந்தபுரம், (கிளிநொச்சி). (40477)

## நீர்வேலி வடக்கு சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்

# அறிவித்தல்

நீர்வேலி வடக்கு மகளிர் சி. க. வ. கூ. சங்கமும், சமூக அபிவிருத்திசேமிப்புக்கழகத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் **23 - 3 - 96**ஆந் திகதி சனிக்கிழமை காலை **09.00** மணிக்கு சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாசாலைக்கு அருகாமையில் உள்ள திரு. க. ஞானசம்பந்தர் (ஆசிரியர்) சரசாலை வடக்கு, சரசாலை என்னும் முகவரியில் நடைபெறும். ஆகவே சகல அங்கத்தவரையும் சமுகம் கொடுத்து ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

நிர்வாகத்தினர்.
நீ. வ, ம. சி. க. வ. கூ. ச
நீ. வ. ச. அ. சே. க.

வி. பா. (41170)

வீ.எச்.லேன் [...]பாலை-கோப்பாயைச் சேர்ந்தவரும், 34, புது வீதி, அத்தியடியில் வசித்தவருமான

அமரர்

## சுப்பிரமணியம் நித்தியானந்தன்

தோற்றம்; **14 - 01 - 1953** யாழ்ப்பாணம்:

மறைவு: **19 - 02 - 1996** ஜேர்மனி:

பொன்னான மேனியிலே - ஒரு பொல்லாப்பு
வந்த தென்ன?
தங்கத் திருமேனியை-யாவரும் காண்பதெப்போது?
வருவீர் வருவீர் என்றல்லவோ - உம்
குடும்பத்தார் பேதையர் போல் நம்பிருந்தார்
ஆலமரம் போல் நீர் இருப்பீர் என்றிருந்தோரை
இடை நடுவே விட்டுப் பிரிந்ததேனோ?
கதறி அழுகின்றனர் உம் சுற்றத்தார்
ஆனால் நீரோ சிறகுகளைத் தூக்கி விட்டீர்
நீர் போன பாதை புரியுதையா - அது
நிலையான முத்தி நிலை தானய்யா!
இறைவனின் திருவடிகளில் அன்னாரது ஆத்மா
சாந்தி அடைவதாக

மறைவு குறித்து ஜேர்மனி - முன்ஸ்ரர் தமிழ் மக்கள் சார்பில் முன்ஸ்ரர் தமிழர் கலை - கலாச்சார விளையாட்டுக்கழகம் செலுத்தும் இரங்கல் செய்தி

(41062)

# ஐந்தாண்டு நினைவாஞ்சலி



அன்னை மடியில்: 04 — 08 — 1966

ஆண்டவன் பிடியில்: 17 — 03 — 1991

## சிவபுரநாதர் சிவராசா

(சுன்னாகம் மின்சார சபை பாதுகாப்பு ஊழியர்)

திதி புதன்கிழமை **20 - 03 - 1996**

ஐந்தாண்டு முடிந்ததையா - எம்
அருமை மகன் உன் நினைவை
அவனியில் நாம் மறப்போமா
ஐயா உன் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை நாம் அனுதினமும் பிரார்த்திப்போம்.

சுன்னாகம் மின்சார சபை
ஊழியர்களுக்கு நன்றி.

உன் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா,
அக்கா, மருமகன்

சங்கரத்தை,

(41059)

# தேடப்படுகின்றார்

செல்வி. க. ஜெயரூபி (வயது 25) என்பவரை 9-2-96 இல் இருந்து காணவில்லை. அவரின் அம்மாவுக்கு கடும் சுகயீனம் அம்மம்மா ஊர் ஊராய் தேடித்திரிகின்றார். எங்கிருந்தாலும் உடனடியாக வரவும்.

க. கணேஷன்
தும்பளை வீதி,
பருத்தித்துறை.

(40362)

# தேடுகின்றார்

குரும்பசிட்டியைச் சேர்ந்த தங்கரத்தினம், தற்போது பெருங்குளத்தில் வசிப்பவர் உடனே தொடர்பு கொள்ளவும். முகவரி:

த. பரமசாமி (நீர்வேலி)
C/o ரி. தம்பிமுத்து
மட்டுவில் சிவன்கோவில் வீதி,
வாகையடி ஒழுங்கை,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி (41175)

# வேலை வாய்ப்புகள்

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள தமிழீழ நிர்வாக சேவையில் பின்வரும் பதவி நிலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து **31 - 03 - 96**க்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொறியியலாளர்
தகமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பொறியியல் பட்டம் பெற்றவர்கள் அல்லது அதற்கு சமனான தகைமையுடையவர்கள்.

2. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
தகமை: தொழில்நுட்ப கல்லூரியில் பொறியியல் கல்வித் தகமை பெற்றோர் அல்லது அதற்கு சமனான அனுபவம் பெற்றவர்.

3. கணிய அளவையாளர்
தகமை: தொழில்நுட்ப கல்லூரியில் கணிய அளவைப் பயிற்சி நெறியில் தகமை பெற்றோர் அல்லது உரிய அனுபவம் பெற்றோர்.

4. படவரைஞர்
தகமை: தொழில்நுட்ப கல்லூரியில் படவரைஞர் பயிற்சி நெறியில் தகமை பெற்றோர் அல்லது அனுபவமுடைய படவரைஞர்கள்.

5. கணக்காளர்
தகமை: தொழில்நுட்ப கல்லூரியில் கணக்காளர் பயிற்சி நெறியில் தகமை பெற்றோர் அல்லது முன்னனுபவமுடையோர்.

6. கணக்குப் பதிவாளர்
தகமை: முன்னனுபவமுடைய கணக்குப் பதிவாளர்கள்.

தகுதியுடையோர் தமது மாவட்டத்தில் உள்ள தமிழீழ நிர்வாக சேவை பொறியியல் பகுதிக்கு தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்.

பொறுப்பாளர்,
தமிழீழ நிர்வாக சேவை,
தமிழீழம்.

(சி/4123)

# மரண அறிவித்தல்

## திருமதி கி. ஜெயலட்சுமி

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி கி. ஜெலட்சுமி 13-3-96 அன்று ஜேர்மனியில் காலமானார்.

இவர் முன்னாள் கொழும்பு சாரதா ஸ்டோர்ஸ், பிரேமா டிரேடிங் கொம்பனி உரிமையாளர் கிருபானந்தரின் அன்பு மனைவியும், சிங்கப்பூர் செல்லையா- செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் - சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், சுதர்சனா, ரூபனா ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகலிங்கம் (சிங்கப்பூர் போசன சாலை, யாழ்ப்பாணம்), குணரட்ணம் (ஜேர்மனி), இந்திராணி (ஜேர்மனி), சறோஜினிதேவி (ஜேர்மனி), சாந்தகுமாரி (ஜேர்மனி), கோணேஸ்வரி (ஜேர்மனி), பிரேமகுமாரி )ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயராசா, குலேந்திரன், வெற்றிவேல் பிள்ளை, யோகசுந்தரம், சிவகரன் ஆகியோரின் சகலியும், கமலாம்பிகை, தனலட்சுமி, உலகநாயகி, பாலசிங்கம் (கனடா), கவுரியாள், ஆனந்தராசா (கனடா), யோகேஸ்வரி, சவுந்தரராசன் ஆசியோரின் அன்பு மைத்துனியும், சொல்வானந்தன், புஸ்பராணி, இராசேந்திரன், இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு அண்ணியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 17-3-96 அன்று ஜேர்மனியில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. கனகலிங்கம்
சிங்கப்பூர் போசானசாலை,
42, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி:
செ. கனகலிங்கம்
C/o கு. தம்பிஐயா
சந்தை வீதி,
கொடிகாமம். (41174)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை இலங்கை தடை செய்தால் வெளிநாடுகளும் தடை செய்யுமா?

## எதிர்பார்க்க முடியாது என்கிறார் பீரிஸ்

கொழும்பு, மார்ச். 20 ''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கை அரசு தடைசெய்தாலும்' மற்றைய நாடுகள் அந்த இயக்கத்தை தடைசெய்யும் என எதிர்பார்க்க முடியாது''

இவ்வாறு நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

''ஐரிஷ் குடியரசு இராணுவத்தை (ஐ. ஆர். ஏ.) பிரிட்டிஷ் அரசாங்கம் இதுவரை தடைசெய்யவில்லை.

நாம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்த மாட்டோம் என்றில்லை. ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்துள்ள மூன்று நிபந்தனைகளையும் புலிகள் ஏற்றுக்கொண்டால் நாம் பேச்சு நடத்த தயாராக இருக்கிறோம்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக்குழு காலம் கடத்தாமல் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்த பின்னர் 2 தடவைகள் குழு கூடியுள்ளது.

இவ்வாரத்தில் இன்றும், நாளை மறுதினமும் தெரிவுக் குழு மீண்டும் கூடும்— என்றும் அவர் தெரிவித்தார்,

## புலிகளை தடைசெய்யும் கோரிக்கை வலுக்கிறது

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்ற கருத்து அரசாங்க வட்டாரங்களில் வலுத்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்க எம். பிக்கள் மட்டத்தில் இந்தக் கருத்து தீவிரமாகப் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இது விடயத்தில் அரசாங்கம் மிகவும் அவதானமாகச் செயற்படுவதாக அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தால், பேச்சுவார்த்தைக்கான கதவு முற்றாக மூடப்பட்டுவிடும். அதன் பிறகு விடுதலைப் புலிகளை வேரோடு அழிப்பதற்கான பெரும் போரை நடத்த வேண்டிய தேவை உருவாகும் என்றும் அது நாட்டைச் சீரழித்து விடும் என்றும் அரச உயர் வட்டாரங்கள் கருதுகின்றன.

(அ)

## இப்படியும் நடக்கிறது

தனது சைக்கிளைத் திருடிக் கொண்டு ஓடிய ஒருவரைத் துரத்திப் பிடிப்பதற்கு மற்றொருவரின் சைக்கிளை கேட்டு வாங்கிய ஒருவர், வாங்கிய சைக்கிளுடன் ஓடித் தப்பி தலைமறைவானார்.

இந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை பொலிகண்டியில் இடம்பெற்றது.

சுரேஸ்குமார் என்பவரே இந்த ஏமாற்றுப் பேர்வழியின் மோசடியில் சிக்கி தனது சைக்கிளை இழந்தவர் ஆவார்.

சம்பவதினம் இவர் பொலிகண்டியில் தனது சைக்கிளுடன் நின்று கொண்டிருந்த சமயம், அங்கு ஓடிவந்த முன் பின் தெரியாத நபர் ஒருவர், தமது சைக்கிளை ஒருவர் திருடிக் கொண்டு ஓடுவதாகவும்—

அவரைத் துரத்திப் பிடிக்க சைக்கிளைத் தந்து உதவுமாறும் கேட்டார். அவசரத்தில் நின்ற அந்த நபரின் பேச்சை நம்பி தனது சைக்கிளை இவர் கொடுத்தார்.

ஆனால் சைக்கிளுடன் சென்ற நபர் திரும்பி வரவில்லை.

சைக்கிளை அபகரிப்பதற்காக அவர் இப்பிடி ஒரு நாடகத்தை ஆடியது பின்னரே தெரியவந்தது.

## பாடபுத்தகம் வருகிறது

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடப் புத்தகமும், இலவச சீருடைக்கான துணியும் அடுத்த வாரம் கப்பல் மூலம் எடுத்து வரப்பட இருப்பதாக யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

(இ—7)

## தமிழீழ வானொலி

புதன் மாலை

- ★ 5-00 — ஆரம்பம்
- ★ 5-02 — எழுச்சி கீதம்
- ★ 5-10 — படப்பாடல்கள்
- ★ 5-30 — உங்கள் தெரிவு
- ★ 6-00 — புதியவை
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 6-30 —ஒலிபரப்பு நிறைவு

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

புதன் இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — களமும் கானமும்
- ★ 8-10 — நாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- 8-40 — அறிவிப்புகள் தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப் பாடல்கள்

வியாழன் காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7-02 —மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 மணி வரை இசை மாலை
- ★ 7-30 — செய்திகள்.
- ★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப் பாடல்கள்

## ஐ. தொ. கா. கலைக்கப்படும்

கொழும்பு, மார்ச் 19

தோட்டப் பகுதிகளில் ஒரு காலத்தில் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குப் போட்டியாக இருந்த இலங்கை ஜனநாயக காங்கிரஸ் கலைக்கப்பட உள்ளது.

## உதயன்

### சுடலை ஞானம்!

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவல் சம்பந்தமான சட்ட ஆவணத்தில், தமிழ் பேசும் மக்களின் அச்சத்தை அகற்றும் நோக்குடன் கொண்டு வரப்பட்டுள்ள ஒரு சரத்தைத் தானும் காண முடியவில்லை—

இந்தச் சட்ட ஆவணம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு காத்திரமான நடவடிக்கை அல்ல—

இவ்வாறு ஈ. பி. டி. பி. கட்சியினர் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர்.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளில் ஒன்றைத்தானும் சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் எட்டியும் பார்க்கவில்லை என்பதனைக் கண்டுபிடிக்க ஈ. பி. டி. பியினருக்கு எட்டு மாதங்கள் சென்றுள்ளன!

அதிகாரப் பகிர்வு கேட்கும் தமிழர்களுக்கு அதிகாரப் பரவல் வழங்குவதாகக் கூறும் அரசின் கஞ்சத்தனத்தை இப்போதாவது இவர்கள் கண்டுபிடித்திருப்பது பெரிய காரியமே. ஆனால் இந்தச் சுடலை ஞானம் தமிழ் மக்களுக்கு எந்தவிதத்திலும் உதவப் போவதில்லை.

அரசாங்கம் இப்போது கிள்ளிப் போடுவதைப் பொறுக்கிக் கொள்ளாவிடில், பிறகு எதுவுமே கிடைக்காமற் போய்விடும் என்று கூறிக்கொள்ளும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு இன்னமும் இந்தச் சுடலை ஞானம் தானும் பிறக்கவில்லை!

கூட்டணிக்கு மட்டுமன்றி ஏனைய கொழும்புத் தமிழ்க் கட்சியினருக்கும் மக்கள் ஆதரவு என்ற முதுகெலும்பு இல்லை. மேலும் தமது சொந்த வர்க்க நலன்களைப் பேண வேண்டிய தேவையும் அவர்களுக்கு உண்டு.

அதனாலேயே அவர்கள் அரசு தருவதை ஏற்க மறுத்தால், பின்னர் எதுவுமே கிடையாது என்ற தோல்வி மனப்போக்கோடு (Pessimistic) பார்க்கின்றனர்.

தமிழர் நலனில் இவர்களுக்கு ஒரு சதவீதமேனும் அக்கறை இருந்தால், சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தின் போலித்தனத்தை அம்பலப் படுத்த வேண்டும். தெரிவுக் குழுவுக்கு இவர்கள் திருத்தம் சமர்ப்பித்து அவர்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

சுயநிர்ணய உரிமையும், தமிழர் தாயகமும், தன்னாட்சி உரிமையும் கேட்கும் தமிழர்களுக்கு—

அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கக்கூட விரும்பாமல், தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் பொதுவான அதிகாரப் பரவலை மட்டுமே இத்தீர்வுத் திட்டம் வழங்க முற்படுகிறது என்ற உண்மையை வெளிஉலகுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

இத்தீர்வுத்திட்டத்தை தாங்கள் ஆதரிக்கப் போவதில்லை என்று பகிரங்கப்படுத்த வேண்டும்.

வெட்டு ஒன்று துண்டு இரண்டாக சந்திரிகாவின் செப்படி வித்தையை உலகத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஆகக் குறைந்தது அதனையாவது செய்வார்களா? அவ்வாறு செய்வதன் மூலம் அரசியலில் ஒரு திருப்பத்தைக் கொண்டு வருவரா?

,அவ்வாறு செய்யின் —

அரசின் தீர்வுத்திட்டத்தை தமிழர்கள் ஏகோபித்து எதிர்க்கிறார்கள்என்று காட்டலாம். சந்திரிகா கூறுவது போல அவரின் திட்டத்தால் தமிழர் பிரச்சினை தீரப்போவதில்லை என்ற உண்மையை உலகுக்குச் சொல்லலாம்.

# ஸ்ரீலங்காவுக்கு ஆயுதங்களை விற்காதீர்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடர்களை எதிர்கொள்வதில் இஸ்ரேல் மக்கள் காட்டிய அளப்பரிய துணிச்சல் குறித்தும் தமது தேசிய அடையாளத்தையும் தாம் வருந்தியுழைத்துப் பெற்ற அரசாண்மையையும் நிலைநிறுத்துவதில் அவர்கள் ஆற்றிய தியாகங்கள் குறித்தும், அவர்களை நாம் வியந்து பாராட்டுகிறோம். இஸ்ரேல் தனது முன்னைய எதிரிகளுடன் ஒரு புரிந்துணர்வையும் நிலையான சமாதானத்தையும் கொண்டு வருவதிலே இப்போது காட்டிவரும் முன்னோக்கும் துணிச்சலும் கூட, போற்றிப் பாராட்டத்தக்கனவே.

### இஸ்ரேலிய மக்களின் நிலையிலேயே தமிழர்

நமது அனுதாபத்துக்கும் மனமுவந்த பாராட்டுக்கும் வேறொரு காரணமும் உண்டு. இஸ்ரேலிய மக்கள் தமது சொந்த அரசினை நிறுவுவதற்கு முன் இருந்த அதே நிலையிலே தான் நாமும் இன்று இருக்கிறோம். இலங்கைத் தீவிலுள்ள தமிழர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள்; புறம்பான தேசிய தனித்தன்மையையும் மொழியையும் பண்பாட்டையும் உடையவர்கள்; நெடியதொரு வரலாற்றையும் மரபுத் தொடர்ச்சியையும் இன்று வரை பேணி வருகின்றவர்கள்; இலங்கைத் தீவிலே வரையறையான — பிளவுபடாத — ஆள்புலமென்றிலே பல நூற்றாண்டுகளாகத் தன்னாட்சி உரிமையுடன் வாழ்ந்து வந்தவர்கள். பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஈரோப்பியரின் ஆட்சி தொடங்கும் வரை இந்த நிலையே நிலவிற்று.

### தமிழரை அடிமைப்படுத்தினர்

இறுதிக் காலனியத்தின் ஆட்சியாளராகிய பிரித்தானியர்கள் தமது சொந்த நிருவாக வசதி நோக்கி, சிங்களவர்கள், தமிழர்கள் ஆகிய இரு தேசியத் தொகுதியினரையும் ஒரே ஆட்சியமைப்பின் கீழ்க் கொண்டுவந்தனர். 1948 இல் பிரித்தானியர்கள் இலங்கையை விட்டுச் சென்றபொழுது தம் வருகைக்கு முன் இங்கிருந்த முந்திய நிலையை மீட்டளிப்பதற்குப் பதிலாகத் தாம் வலிந்து புகுத்திய (ஒற்றை) ஆட்சி முறையினை இந்நாட்டில் விட்டுச் சென்றனர். இதனால் எண்ணிக்கைப் பெரும்பான்மை உடையோராகிய சிங்களவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றித் தமிழர் மீது மேலாண்மை செலுத்தக் கூடிய வாய்ப்புக்கிட்டிற்று சிங்களவர் தமது எல்லை கடந்த எண்ணிக்கைப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி, சட்டங்களை இயற்றி அடக்குமுறை நிருவாக நடவடிக்கைளைக் கையாண்டு, தமிழ்த் தேசியத்தின் தனித்தன்மைகளை அழித்தொழித்துவிட முற்பட்டனர். சிங்கள மக்கள் அரச ஆதரவுடனான குடியேற்றத் திட்டங்களின் கீழ், தமிழர் தாயகத்தின் பல்வேறு பாகங்களிலும் குடியேற்றப் பட்டனர்; இன்றும் குடியேற்றப்படுகின்றனர். இதனால் தமிழ் மக்கள் தம் சொந்தத் தாயகத்திலேயே சிறுபான்மை ஆக்கப்படுகின்றனர். கல்வியிலும், தொழில் வாய்ப்பிலும் பொருண்மியச் செயற்பாட்டின் ஒவ்வொரு துறையிலும் தமிழர்களின் வாய்ப்புரிமைகள் மறுக்கப்படுகின்றன.

ஒரு தேசியத் தொகுதியாக இருந்து வாழும் வாய்ப்புக்கள் ஒழிக்கப்படுமோ என்ற அச்சத்தினாலே தமிழ் அரசியல் தலைவர்கள் நாற்பதாண்டுகளுக்கு மேலாக — சனநாயக வழிகளிலே — தொடர்ந்து போராடினர். [illegible] களும், பௌத்த துறவிகளும் கடைப்பிடித்த அகம்பாவம் நிரம்பிய இனவாத அரசியலின் முன் அந்தப் போராட்டங்கள் தோல்வி கண்டன. தமிழர்கள் தம் உரிமைகளையும் விடுதலையையும் வென்றெடுக்கும் பொருட்டு விடுதலை நோக்கிய ஆயுதப் போராட்டமொன்றில் இறங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

### நேரில் வந்து பாருங்கள்

இன்று ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு செய்யும் போர் விமானங்கள், பீரங்கிப் படகுகள், சண்டைத் 'தாங்கிகள்' என்பன எல்லாம் வேற்று நாட்டுப் படையெடுப்பாளர் எவருக்கும் எதிராக ஏவப்படுவதில்லை. மாறாக தமிழர்களின் இன்றைய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கி அடிமைப்படுத்தி வைக்கவே உதவுகின்றன. பொது மக்களின் வாழ்விடங்களில் நடத்தப்படும் பாரிய எறிகணை, விமானக் குண்டு, கடற் பீரங்கி வீச்சுகள் மயமான இராணுவ நடவடிக்கைகளின்போது, புகலேதுமற்ற தமிழ்ப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கிலே கொன்று குவிக்கப்படுகின்றனர்; ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் உறுப்பிழந்து முடங்கியுள்ளனர்; வதிவிடங்களும், வாழிடங்களும் ஆயிரக்கணக்கில் அழித்தொழிக்கப்பட்டுள்ளன; வழிபாட்டிடங்களும் சந்தைகளும் மருத்துவமனைகளுங் கூட, ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் விட்டுவைக்கப்படவில்லை. இலட்சக்கணக்கான தமிழர்கள் தம் இல்லங்களைக் கைவிட்டோடி அகதி முகாம்களிலும், கல்விக் கூடங்களிலும் கோயில்களிலும் விலங்குகள் போன்று அடைபட்டு அழுந்துகின்றனர். இவையெல்லாம் உண்மைகள்; வடக்கு - கிழக்கில் இயங்கும் அரசு சாரா நிறுவனம் எதுவும் இவற்றை உறுதி செய்யும். அல்லது தங்கள் பிரதிநிதிகளில் ஒருவர் வடக்கு - கிழக்குக்கு வருகை புரிந்து, இவற்றை நேரிலே பார்த்து உறுதி செய்யலாம்.

தமக்கெனச் சொந்தமான அரசொன்றை நிறுவுவதற்கு நெடுங்காலமாகப் போராடி வந்த இஸ்ரேலிய மக்கள் வேறு எவர்களையும் விட நன்றாக நமது கதியை விளங்கிக் கொள்வார்கள் என எண்ணியிருந்தோம். ஆனால், அவர்களுடைய அரசானது கொடிய போர் விமானங்களையும், பீரங்கிப் படகுகளையும் ஸ்ரீலங்காவுக்குத் தொடர்ந்தும் விற்பனை செய்து ஸ்ரீலங்கா அரசுக்கு உடந்தையாய் இருப்பதுபற்றி மனம்வருந்துகிறோம். உங்கள் உதவி போரினை நீடித்து தமிழர்களின் துன்பங்களைப் பெருக்குவதற்கும், ஸ்ரீலங்கா அரசும், பௌத்த சங்கமும் தமிழர் பிரச்சினைக்கு நீதியான தீர்வொன்றைக் காண்பதனைத் தடுப்பதற்குமே துணைபோகும். இதனை உணர்ந்து மேற்கு நாடுகள் பல கெடுதி பயக்கும் ஆயுதங்களைச் ஸ்ரீலங்காவுக்கு விற்பனை செய்ய மறுத்துள்ளன. அவ்வாறே மேன்மை தங்கிய தங்கள் அரசும் செய்ய வேண்டுமெனவும், இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு பேச்சுவார்த்தைகளைத் தொடங்குமாறு ஸ்ரீலங்கா அரசினைத் தூண்டவேண்டும் என்றும் தங்களை அன்புடன் வேண்டுகிறோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## தொடர்புகொள்ளவும்

தமிழீழ சுகாதார சேவையில் தட்டெழுத்தாளராகக் கடமையாற்றியவர்கள் 23-03-96 க்கு முன் தமிழீழ சுகாதார சேவைகள் பணியகம், சாவகச்சேரியில் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

பொறுப்பாளர்,
தமிழீழ சுகாதார சேவைகள்

(சி/4125)



## தர்மிசா ரவல்ஸ்

வாரத்தில் இரு தடவைகள் இடம்பெற்ற எமது சேவை இவ்வார முதல் மூன்று தடவைகள் இடம்பெற உள்ளதால் ஏற்கனவே பிரயாணப் பதிவுகளை மேற்கொண்ட அனைத்து நோயளர்களும் வயோதிபர்களும் 20-03-96 புதன் காலை 10.00 மணிக்கு தவறாது சமூகம் தரவும்.

புதிய பதிவுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(சி/2996)


# கொழும்பு காக்கைதீவு பகுதியிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்படுவர்

கொழும்பு முகத்துவாரத்தில் உள்ள காக்கை தீவுப் பகுதியை அனுமதியின்றிப் பிரவேசிக்க முடியாத பாதுகாப்பு வலயமாக்குவது குறித்து பாதுகாப்புச் சபை மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

அதே வேளை, காக்கைதீவில் குடிசைகள் அமைத்து வசிப்போரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவர்களில் மிகப் பெரும்பாலானோர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முகத்துவாரப் பகுதியில் வீதி மதகுக்குக் கீழே வெடிகுண்டுப் பொருள்களும், ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் —

பொலீஸார் நடத்திய விசாரணைகளில் இருந்து விடுதலைப் புலிகள் கொழும்புக்கு ஆயுதங்களைக் கொண்டு வருவதற்கு காக்கைதீவை ஒரு கேந்திர நிலையமாகப் பயன்படுத்துவது தெரிய வந்துள்ளதாம்.

புலிகளின் கொழும்பு மறைவிடங்களில் அதுவும் ஒன்று எனவும் கண்டறியப்பட்டுள்ளதாம்.

இதனைத் தொடர்ந்தே காக்கைதீவுப் பகுதியை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்துவது குறித்து ஆராயப்படுவதாக ''சண்டே லீடர்'' தகவல் வெளியிட்டுள்ளது. (அ)

### இ. தொ. கா. ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எஸ் தொண்டமான் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்த வேலை நிறுத்தத்தில் தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டங்களைச் சேர்ந்த ஆறு லட்சம் தொழிலாளர்கள் கலந்து கொள்ள உள்ளதாயும் அவர் கூறினார். (இ-ரி)

### சிமெந்து..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பு கொண்டதை அடுத்து சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு வேதனம் வழங்குவதில் கடந்த ஐந்து மாதங்களாக இருந்த இழுபறி நிலை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வழமை போல் சிமெந்துக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் கொழும்பு சென்று சம்பளத்துக்குரிய காசோலையை எடுத்து வந்து சாவகச்சேரியில் வைத்து ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்க முடியும் என்று யாழ். அரச அதிபருக்கு நேற்று கொழும்பிலிருந்து தகவல் கிடைத்துள்ளது. (உ-3-7)

### அரச..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

முதல் வேட்டுப்பட்டு கார் கண்ணாடி நொருங்கியது. அடுத்த வேட்டு பத்மநாதனின் தோள் பட்டையை தாக்கியது.

துப்பாக்கி வேட்டு தீர்க்கப்பட்டதுமே சாரதி துரிதமாக செயற்பட்டு காரை வேகமாக ஓட்டி அரச அதிபரின் வீட்டு வளவுக்குள் நுழைந்துவிட்டார். துப்பாக்கி நபர் தப்பியோடிவிட்டார் என்று கூறப்படுகிறது. (இ-ரி)

### புலிகளின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதாகவும்— பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்தளவு பலத்துடன் விளங்கும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்வது மேலதிக அதிரடிப் படைத் துருப்புக்கள் இன்றிச் சாத்தியமற்றது என்றும் உயர்வட்டாரங்களுக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. (அ)

### 10 போராளிகள்..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

டன் — திருமலை)

★ வீரவேங்கை விசு (கணபதிப்பிள்ளை இரவீந்திரன் — நெடுந்தீவு)

★ வீரவேங்கை ஈழச்செல்வன் (அஞ்சலி லோறன்ஸ் கமல் — மன்னார்)

★ வீரவேங்கை நிலாவேந்தன் (சூசையப்பு பீலிஸ் ரவீந்திரன் பீலிஸ் - மன்னார்)

★ வீரவேங்கை கவிராஜ் (செல்வராசா மனோகர விஜியன் — மன்னார்)

இந்தச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தார்.

மன்னார் போசலையைச் சேர்ந்த கருணா என்பவரே அவராவார்.

இந்தாக்குதலில் 16 படையினர் கொல்லப்பட்டதும் கடற்படை வேவுப் படகு ஒன்று அழிக்கப்பட்டதும், மற்றும் ஒன்று சேதப்படுத்தப்பட்டதும், இன்னொன்று கைப்பற்றப்பட்டதும் தெரிந்ததே. (இ-7)

## 'உ' அட்டைக்கு மா வழங்க நடவடிக்கை

சாவகச்சேரி, மார்ச் 20

இடம்பெயர்ந்த 'உ' அட்டை வைத்திருப்பவர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் கட்டுப்பாட்டு விலையில் மா விநியோகிக்கப்படும்.

ஒன்று தொடக்கம் மூன்று அங்கத்தவர்களுடைய பங்கீட்டு அட்டைக்கு ஐந்து கிலோ மாவும்—

நான்கு தொடக்கம் ஐந்து அங்கத்தவர்களுடைய பங்கீட்டு அட்டைக்கு எட்டு கிலோ மாவும்— விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து குமாரசாமி

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து குமாரசாமி 19-3-1996 அன்று காலமானார்.

அன்னார் செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், சாந்தி (கனடா), சிறிதரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரி, கமலாம்பிகை (ஈஸ்வரி), மகேந்திரா அகியோரின் அன்புச் சகோதரனும், இராசரத்தினம் (உவேஸ்லிக் கல்லூரி), தங்கரத்தினம் (கனடா), சிவஞாசுந்தரம் (கனடா), பரமேஸ்வரி (கொழும்பு), ஞானாம்பிகை (ஆசிரியை, பண்ணாகம் மெய்கண்டான் ம. வி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். இறுதிக்கிரியைகள் இன்று 20-3-1996 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இத் தகவலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. இராசரத்தினம்

'பாக்கிய வாசா'
பெருந்தெரு,
புலோலி தெற்கு,
புலோலி.

(49363)

வைத்திய கலாநிதி

### சிவஞானம் குமரகுருநாதன்

இணுவில் மேற்கு — மஸ்கெலியா

நாயன்மார்க்கட்டை பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு ''பழமுதிர்சோலை''யை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் சி. குமரகுருநாதன் மஸ்கெலியாவில் 18-03-1996 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சிவஞானம், தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான இணுவில் மேற்கைச் சேர்ந்த கந்தையா, பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், சந்திரகுமார் (யாழ்-மருத்துவபீடம்), தனவந்தி (யாழ். மருத்துவ பீடம்), செல்வந்தி (யாழ் - விஞ்ஞான பீடம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும்; வைத்திய கலாநிதி கனகரட்னம் (உரும்பிராய்), சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி — நுணாவில் சந்தி), காலஞ்சென்ற மயில்வாகனம் (யாழ். மக்கள் வங்கி - நாயன்மார்கட்டு) ஆகியோரின் அருமைச் சகோதரரும், விவேகானந்தன் (லண்டன்) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கு. புனிதவதி (மனைவி)
''பழமுதிர்சோலை''
கந்தசுவாமி கோவில் றோட்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தற்போதைய முகவரி:
C/o சி. சுப்பிரமணியம்,
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி)
வீரக்கொடியன் ஒழுங்கை,
நுணாவில் சந்தி, சாவகச்சேரி.

(41067)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்


## ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் பரவலான பணி

சிறார்களுக்கும், இடம்பெயர்ந்தவர்களுக்கும் பால்மா விநியோகம்

**20-3-96** புதன்:-
காலை 9 மணி பருத்தித்துறை தட்டாதெரு மெ. மிஷன் த. க. பாடசாலை
காலை: 10.30 வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.
பி. ப. 3.30 மதிய பாடசாலை மாணவர்கள்.

**21-3-96** வியாழன்:-
காலை: 9 மணி குடத்தனை அரசினர் த. க. பாடசாலை.
காலை: 10.30 நடுக்குடத்தனை அரசினர் பாடசாலை.
காலை: 11.30 சரஸ்வதி வித்தியாலயம் கரவெட்டி.

**22-3-96** வெள்ளிக்கிழமை:-
காலை: 10 மணி சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்.
மதியம் 12.30 கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம், வறணி.

**25-3-96 — 29-3-96**

அம்பன் - நாகர் கோவில் - செம்பியன் பற்று — பாடசாலை சிறார்கள்

அன்னையின் திருநாமம் வாழ்க

பருத்தித்துறை
20-3-96

செயலாளர்

முக்கிய குறிப்பு:- ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளை உபதலைவர் தவத்திரு சுவாமி ஆத்மகணானந்தர் மகராஜ் அவர்கள் அனுப்பிய பால்மா

(சி/4124)



## வாடிக்கையாளருக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

76 A, கன்னாதிட்டி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த உங்கள் மனங்கவர் தங்க, வைர நகைகளின் கலைக்கூடமாகத் திகழ்ந்த

# ★ மதன் நகை மாடம் ★

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி இன்று (20-03-96) புதன்கிழமை பருத்தித்துறை வீதி, மந்திகை சந்தை அருகில் ஆரம்பிக்கவுள்ளனர் என்பதை வாடிக்கையளர்கள், அன்பர்கள் யாவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(40360) மதன் நகை மாடம்

பருத்தித்துறை வீதி,
மந்திகைச் சந்தை அருகில், மந்திகை.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 20-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org